விலை ரூபா: 5.00 பக்கங்கள் எட்டு

யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
VALAMPURI

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்




சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 12 செவ்வாய்க்கிழமை (26.03.2002) தொலைபேசி 3378 ஒலி 97

## மாலைதீவில் இருந்து கடல் வானூர்தி மூலம்

# அன்ரன் பாலசிங்கம் தம்பதிகள் நேற்று வன்னி வந்து சேர்ந்தனர்

## * தலைவர் பிர்பாகரன் தம்பதிகள் வரவேற்பு
## * கடற்புலிகளின் படையணி பாதுகாப்பு
## * புலிப்படைத்தளபதிகள் இரணைமடுவில் புடைசூழ்ந்தனர்



(நமது சிறப்பு நிருபர்)

**மாலைதீவில் இருந்து மாலைதீவுக் கடற்படைக்குச் சொந்தமான "மோட்டீஸ் ஒவக்கீஸ்" என்னும் கடல் வானூர்தி மூலம் நேற்று காலை 10.15மணிக்கு இரணைமடுக்குளப்பகுதியில் வந்திறங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தம்பதிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மதிவதனி தம்பதிகள் இன்முகத்துடன் கைலாகு கொடுத்து வரவேற்றார்கள்.**



மாலைதீவில் இருந்து சிவப்பு வெள்ளை கடல் வானூர்தியில் நேற்றுக் காலை 6.30 மணிக்கு அன்ரன் பாலசிங் கம் தம்பதிகள் புறப்பட்டனர். இந்த வானூர்தியில் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தை சேர்ந்த 2வது செயலாளர் தோமஸ்என்பவரும் வந்திருந்தார். அன்ரன் பாலசிங்கம் பயணித்த அந்த கடல் வானூர்தியை கனேடிய விமான ஓட்டிகள் இருவர் ஓட்டி வந்தனர்.

கடற்புலிகளின் படையணியின் 3 இயந்திரப் படகுகள் இரணை மடுக் குளப்பகுதியை வலம் வந்து பாதுகாப்பளிக்க கடல் வானூர்தி இரணைமடுக்குளத்தில் நேற்றுக் காலை 10.45 மணியிளவில் வந்திறங்கியது. வந்திறங்கிய கடல் வானுர்தியில் இருந்து கடற்புலிகளின் இயந்திரப் படகில் ஏறிய அன்ரன் பாலசிங்கம் தம்பதிகளை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை, காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் ஆகியோர் வரவேற்றனர்.

இயந்திரப் படகுகள் இரணை மடுக்குளத்தின் கரைப்பகுதிக்கு கொண்டுவரப்பட்டு அதிலிருந்து இறங்கிய பாலசிங்கம் தம்பதிகளை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தம்பதிகள் இன்முகத்துடனும் உற்சாகத்துடனும் கைலாகு கொடுத்து வரவேற்றனர். இவ்வரவேற்பின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள், (8ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று ஆயுதம் கையளிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி ஆர்.எல்.எவ் வரதர் அணி ஆகிய தமிழ்க் கட்சிகள் தம்வசமுள்ள ஆயுதங்களை மட்டக்களப்பு மாவட்டத் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனிடம் நேற்று கையளித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபைக் கட்டடத்தில் இயங்கும் 23வது படைப்பிரிவுத் தலைமையகத்தில் தமிழ்க் கட்சிகள் தம்மிடமுள்ள ஆயுதங்களை ஒப்படைத்தன.

புளொட் அமைப்பினர் சார்பில் மாவட்ட அமைப்பாளர் வி.பாக்கியராஜ், ரி 56 ரக துப்பாக்கிகள் 4, கைத்துப்பாக்கிகள் 4 (2ம் பக்கம் பார்க்க)

## எரிக் சொல் — ஜோன் வெஸ்பேர்க் ஹெலி மூலம் வன்னி சென்றனர்

### அன்ரன் பாலசிங்கத்துடன் சந்திப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கத்தின் வருகையை அடுத்து நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் நேற்று விமானப்படையின் ஹெலிகொப்ரர் மூலம் நண்பகல் 12.20 மணிக்கு கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தார்.

நேர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்முடன் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் சர்வதேச யுத்தக் கண்காணிப்புகுழுவைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் நோர்வேயின் இரண்டு பாதுகாப்பு அதிகாரிகளும் வன்னி சென்றுள்ளனர். கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய நோர்வேத் தூதுக்குழுவினர் கிளிநொச்சியில் உள்ள புலிகளின் நடுவப்பணியகத்தில் பாலசிங்கம் தம்பதிகளை சந்தித்து கலந்துரையாடியதுடன் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர்சு.ப. தமிழ்ச் செல்வனையும் (2ம் பக்கம் பார்க்க)

## ஐ.நா சபை மைதானத்தில் புலிக் கொடி

# உலக ஈழத்தமிழர்கள் ஜெனிவாவில் ஒன்று திரண்டனர்

தமிழ்த் தேசியம், சுய நிர்ணய உரிமை, ஈழத்தமிழரின் தாயகக் கோட்பாடு ஆகியவற்றை வலியுறுத்தி நேற்று சுவிஸ்லாந்து நாட்டின் ஜெனிவா மாநகரில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலகத்தை நோக்கி மாபெரும் எழுச்சிப் பேரணி இடம் பெற்றுள்ளது.

புலம் பெயர்ந்து ஐரோப்பாவில் வாழும் தமிழ் மக்களின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இவ் அமைதி எழுச்சிப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மிகவும் எழுச்சியுடன் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர்.

இவ் எழுச்சிப் பேரணியில் கலந்து கொள்வதற்காக ஐரோப்பிய மற்றும் கனடா ஆகிய நாடுகளில் பரந்து வாழும் தமிழ் மக்கள் சுவிஸின் ஜெனிவா நகருக்கு பெருந்திரளாக வந்து குவிந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தமிழ் மக்களின் தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும், விடுதலைப்புலிகள் மீதான தடையை ஸ்ரீலங்கா உட்பட தடை விதித்த சகல வெளிநாடுகளும் உடனடியாக நீக்கவேண்டும், மற்றும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணும்வரை ஈழத்தமிழரை வெளிநாடுகள் தாயகத்துக்கு திருப்பி அனுப்பக் கூடாது என்ற கோரிக்கைகளை வலியுறுத்தியே இப் பேரணி இடம் பெற்றுள்ளது. (2ம் பக்கம் பார்க்க)

## கஸ்தூரியார் வீதியில் இளைஞனுக்கு கத்திக்குத்து

(யாழ்ப்பாணம்)

யாழ் கஸ்தூரியார் வீதிப் பகுதியில் நேற்று மாலை 7.30 மணியளவில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவம் ஒன்றில் புலோலி மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ரமணன் (வயது 19) என்ற இளைஞன் படுகாயம் அடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப இளைஞனை இளைஞர் கோஷ்டி ஒன்று கண்டபடி தாக்கியதுடன் கத்தியால் குத்தியதாகவும் தெரியவருகிறது. (2ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### படிவம்

அரசாங்க சேவையில்எழுதுநர் சேவைக்கான படிவம் அச்சிட்ட கடித உறையும் விலை ரூபா 5/- நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (4854)

### விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து நியாயவிலையில் 24மணி நேரமும் பெற்றுக்கொள்ளலாம். 61 இராமநாதன் வீதி (மிலேனியம் பாருக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (4874)

### தேவை

யாழ். நகரில் ஆரம்பிக்கப்பட உள்ள ஆடைத் தொழில் சாலைக்கு துணி வெட்டுபவர், தைப்பவர், பூவேலை செய்பவர் தேவை. அனுபவம் வாய்ந்தவர் பயிலுநர்கள் தங்கள் சுய விபரம் அடங்கிய விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி விளம்பர இல- 241, மே/பா, வலம்புரி. (சி-3757)

### சோதிடம்

கல்வியில் சித்தியா?உத்தியோகம்கிடைக்குமா? வியாபாரம்சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? நோய் நீங்குமா? வெளிநாடுபோகலாமா? கேட்டுப்பாருங்கள்;த.சிவானந்தன் பிரபல சோதிடர் ஆனந்தா சோதிடம்264, பலாலி வீதி, கந்தர்மடம். (4876)

---

கடலோசை

நிலைய இணைப்பாளர் பேராசிரியர் கா. சித்திரவடிவேலு வெளியீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர். (உ-23)

## போட்டி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் பொன்விழாவை ஒட்டிநாளை நடைபெறவிருந்த சைக்கிள் ஓட்டப் போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-19)

## இராசிபலன்

26-3-2002

(பங்குனி 12. செவ்வாய்)
துவாதசி கா. 7.05 வரை
மகம் மு.இ. 9.06 வரை
ராகுகாலம் 3.1 - 4.45
நல்லநேரம் 10.45- 12.15
பிரதோச விரதம்.

**மேடம்**
குடும்பக்கவலை, தொழில் கஷ்டம், காரியதாமதம், சயன சுகம் குறைவு.

**இடபம்**
உடல்சோர்வு. தொழில் நன்மை, வாக்குப்பலிதம், முயற்சி தாமதம்.

**மிதுனம்**
நினைத்தகாரியம்கைகூடும், இனிய நிகழ்வு, அந்நியர் சந்திப்பு, பொருள் வரவு.

**கடகம்**
தனவிரயம், வீண்கலகம், முயற்சிதாமதம், மாதர்நட்பு.

**சிங்கம்**
நல்லமுயற்சி, ஜனவசியம், போசனசுகம், நண்பர்கள் உதவி.

**கன்னி**
உணர்ச்சிவசப்படல், முயற்சி தாமதம், பொருள் விரயம், உடல்நலக்குறைவு.

**துலாம்**
தனலாபம், சென்றஇடத்தில் செல்வாக்கு, காரிய நன்மை, குடும்ப நன்மை.

**விருச்சிகம்**
தொழில் முன்னேற்றம், அதிகாரம், உறவினர் வெறுப்பு, காரியம் கைகூடும்.

**தனுசு**
கட்டுப்பாடு, கௌரவக் குறைவு, திடீர் பயணம், முயற்சி தாமதம்.

**மகரம்**
எதிர்பாராத பிரச்சினை, திருடர்பயம், காரிய தாமதம் குடும்ப சுகம்.

**கும்பம்**
கௌரவம், காரிய சித்தி, நண்பர்கள் சந்திப்பு, திடீர் பிரயாணம்.

**மீனம்**
குடும்பமகிழ்ச்சி, முயற்சி கைகூடும், உடல்பலம், தொழில் நன்மை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**


**யாழ்ப்பாண மாநகர சபை**

பொன் விழாக் கொண்டாட்டத்தை
முன்னிட்டு நடைபெறவுள்ள
ஓட்டப் போட்டிகள்- 2002

**நிகழ்ச்சி மாற்றம்**

வீதிப் போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்க்கும் முகமாக ஏற்கனவே திட்டமிட்டவாறு 27.3.2002ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவிருந்தஆண்களுக்கான 50 மைல் சையிக்கிள் ஓட்டப் போட்டி விடுமுறை நாளான31.3.2002 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.

முன்னர் அறிவித்தபடி ஆண்களுக்கான 05 மைல் ஓட்டப் போட்டி எதிர் வரும 28.03.2002 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும்.

மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி அநேக போட்டியாளர்களின் வேண்டுகோளின் படி 27.03.2002 ஆம திகதி புதன்கிழமை வரை பிற்போடப்பட்டுள்ளது.

பூர்த்திசெய்யப்பட்டவிண்ணப்பப்படிவங்கள்அனைத்தும் 27.03.2002 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் உரிய அலுவலகத்தில் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

க கிங்ஸ்லி கணேசன்
இணைப்பாளர்
பொன் விழா ஏற்பாட்டுக்குழு

(கி-3751)


# அரச வரவு-செலவுத் திட்டத்தில் குமார் - சங்கரி கருத்து மோதல்

(கொழும்பு)

தற்போது அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள வரவுசெலவுத்திட்டத்தை ஆதரிப்பதா? அல்லது எதிர்ப்பதா? என்ற நிலைப்பாட்டில் தமிழர் தேசிய கூட்டமைப்பிற்குள் கருத்துமுரண்பாடுகளுடன் கூடிய முறுகல்நிலை ஏற்பட்டுள்ளதாக தமிழர் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழர்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழு நேற்றுப்பிற்பகல் 4.30 மணிக்கு பாராளுமன்ற வளாகத்தில் சந்தித்து வரவுசெலவுத்திட்டத்தை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்று ஆராய்ந்தது.

இதன்போது இந்த வரவு செலவுத்திட்டம் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களின்பிரச்சினைகள் குறித்து எந்த ஒரு அக்கறையும்செலுத்தவில்லை தமிழ்மக்களுக்குப்பிரயோசனமற்ற இந்த வரவுசெலவுத் திட்டத்தை எதிர்க்கவேண்டும் என்று கஜேந்திர குமார் பொன்னம்பலம் தனது கருத்தை எடுத்துக் கூறினார்.

அவரின்கருத்துக்குஆதரவாக திருமலை மாவட்ட எம்.பியும் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான இரா சம்பந்தன், ரெலோவைச்சேர்ந்த என். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் கருத்துக் கூறினர்.

பாராளுமன்றக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஒரு கட்டத்தில் கூட்டணியின்உபதலைவர் ஆனந்த சங்கரிக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் பலத்த வாக்குவாதமேற்பட்டது

இந்நிலையில் அ. விநாயகமூர்த்தி, என்.ரவிராஜ்யோசப் பரராசசிங்கம், வெள்ளிமலை கிருஷ்ணபிள்ளை, சந்திரநேரு வரவுசெலவுத் திட்டத்தை ஆதரிக்கவேண்டும் என்று கருத்துத்தெரிவித்தனர்.

இந்நிலையில் தமிழ்மக்கள் எமக்களித்த ஆதரவிற்கு நாம் துரோகம் செய்யக்கூடாது வரவுசெலவுத்திட்டத்தை ஆதரிக்காது வாக்களிப்பில் இருந்து விலகிக் கொள்வோம் என்ற கருத்தையும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறிவிட்டு வெளியேற முற்பட்டபோது இரா. சம்பந்தன் ஆனந்தசங்கரிக்காக மன்னிப்புக் கேட்டதுடன் வரவுசெலவுத்திட்டம் குறித்து இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்திக்கப் போவதாகத் தெரிவித்தார் (வ)

# யாழ். செயலகத்தில் நேற்று பொதுநிர்வாகம் பற்றிய கூட்டம்

## அமைச்சர் குணசேகரா கலந்துகொண்டார்

(தென்மராட்சி)

பொது நிர்வாகம் சம்பந்தமான கூட்டம் ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இரு நாள் அரசமுறைப் பயணமாக நேற்று யாழ்ப்பாணம் வந்த உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் குணசேகரா, புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா அவர்களின் செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்ட இக் கூட்டத்தில்,

யாழ் குடாநாட்டிற்குள் அடங்கும் பிரதேச செயலகங்களில் காணப்படும் குறைபாடுகள் குறித்து மகஜர் ஒன்றினை வலிவடக்கு பிரதேசசெயலர் திருமதி திலகநாயகம்போல் பத்தினியம்மா அமைச்சர் குணசேகராவிடம் கையளித்தார்.

அம்மகஜரில், யாழ்ப்பாணம், மருதனார்மடம், பருத்தித்துறைப் பிரதேச செயலகங்களுக்கு நிரந்தரக் கட்டடங்களின்மை,

உடுவில், நெடுந்தீவு. பளை பிரதேச செயலகங்கள் சிறிய கட்டடங்களில் இயங்குவது,

சங்கானை, நல்லூர், பளை மருதங்கேணி, நெடுந்தீவு பிரதேசசெயலகங்கள் வாகன வசதியின்றி இருப்பது ஆகியன குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் வடபகுதிகிராம சேவையாளர் சங்கத் தலைவரினல்லா, தமது பதவி உயர்வு பிரயாணப்படி ஆகியன குறித்தும்,

யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையனால் மாநகர சபையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை, உபகரணப் பற்றாக்குறை, வளப்பற்றாக் குறை என்பன குறித்தும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இவர்களது கோரிக்கைகளுக்குப் பதிலளித்த அமைச்சர் குணசேகரா,

யாழ். குடாநாட்டில் போக்குவரத்து, தொலைத் தொடர்பு வசதிகள் நல்ல நிலையில் இல்லாதிருப்பதே திட்டமிட்டு எதனையும் செயற்படுத்த முடியாது இருக்கக் காரணம் எனவும்,

தனது அமைச்சுக்கு விரைவில் 167 வாகனங்கள் கிடைக்கும் எனவும் அவற்றில் பெரும்பாலானவற்றை யாழ் மாவட்டத்திற்கு வழங்கவிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் திணைக்களத்தலைவர்களும் கலந்து கொண்டனர். (உ-77)

---

### எரிக்சொல்

சந்தித்துப் பேசினர்.

இத்தவேளை ஏற்கனவே வன்னிக்கு வந்துசேர்ந்துள்ள நோர்வே, பிரிட்டன் ஆகிய நாடுகளைச்சேர்ந்த கண்ணிவெடி அகற்றும் நிபுணர்களையும் தூதுக்குழு சந்தித்துப் பேசியுள்ளது. (வ)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை லங்கா சீமெந்து லிமிட்டெட்டின் அனைத்து தொழிலாளர் களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று காலை 7மணிக்குஇணுவிலில் உள்ள லங்காசீமெந்து லிமிட்டெட்டின் பகுதிககாரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சுயவிருப்பில் ஓய்வு பெறும் திட்டத்திற்கு விண்ணப்பித்து வேலை இழந்தவர்கள, ஓய்வுபெறும் திட்டத்திற்கு விண்ணப்பித்தவர்கள மற்றும் லங்கா சீமெந்து லிமிட்டெட் தொழிலாளர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கச்செயலாளர் ஆ.முத்துவேல் கேட்டுள்ளார். (இ-5)

### உலக ஈழத்

பேரணியில கலந்து கொண்ட மக்கள மஞ்சள் சிவப்பு நிறத் தொப்பிகளை அணிந்து கொண்டு ஒருகையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் படத்தையும், மறுகையில் தமிழீழத் தேசியக் கொடியான புலிக் கொடியையும் தாங்கியிருந்த காட்சி அழகுற அமைந்திருந்தது.

பேரணியில் கலந்து கொண்ட ஊர்திகளில் புலிகளின் தலைவரின் பிரமாண்டமான அளவு கட்டவுட்டுகள் கட்டப்பட்டிருந்தன.

ஐ.நா அலுவலக மைதானத்தை பேரணி அடைந்ததும் அங்கு மாபெரும் பொதுக் கூட்டம் இடம்பெற்றது ஐ.நா. மைதானத்தில் பலநாட்டுக் கொடிகளுக்கு மத்தியில் ஈழத் தமிழரின் புலிக்கொடிகாற்றிலே அசைந்து தமிழனின் வீரத்தையும் பெருமையையும் தனிச்சிறப்பையும் வெளிக்காட்டிய காட்சிஅற்புதமாக அமைந்திருந்தது.

சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட ஐ.நா.மைதானத்தில் இலங்கைநேரப்படி நேற்றிரவு9.15 மணியளவில் இரண்டுநிமிட அகவணக்கத்துடன் பொதுக் கூட்ட விழா ஏற்பாட்டாளர் எஸ்.குலம் தலைமையில் ஆரம்பமாகியது.

நிகழ்வில் சுவிஸ் பாராளுமன்ற உறுப்பினர் அனோல்ட் ஜபீசன் அமெரிக்க செவ்விந்திய மக்களின் உரிமைக்காகப் பாடுபட்ட அன்ரனியோ கொன்சலட், சர்வதேசமனித உரிமைகள் அமைப்பின் உறுப்பினர் அபேஜன் ஜேகன்ஸ், பேராசிரியர் எபிலியோ, தமிழகத்தில் இருந்து விழாவுக்கு அழைக்கப்பட்ட சு. ப. வீரபாண்டியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (இ)

### மட்டக்களப்பில்

,எம் 70 ரக துப்பாக்கி1, மகசீன்15, தோட்டாக்கள் 650என்பவற்றையும்

ஈ. பி. ஆர். எல். எப் வரதர் அணியின் சார்பில் அமைப்பாளர் ஆர். துரைரெத்தினம் ரி 56 ரகத்துப்பாக்கிகள் 8, கைத்துப்பாக்கிகள் 3, கிரனெட்டுக்கள் 8, மகசீன்கள் 27 என்பவற்றையும்,

ஈ. பி. டி. பி. சார்பில் சிரேஷ்ட உறுப்பினர் விஜி தங்கராசா ரி 56 ரக துப்பாக்கிகள் 3, எம் 70 துப்பாக்கி 1, 9மில்லிமீற்றர் கைத்துப்பாக்கி 3 என்பவற்றையும் கையளித்தனர்.

இந்த ஆயுதக்கையளிப்பில் கிழக்குமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வத்திரி கோரல்லவும் கலந்துகொண்டார். (ந-5)

### கஸ்தூரியார்

இதேவேளை பல்வேறு மோதல் சம்பவங்களில் ஈடுபட்டு மானிப்பாய் சோதி வேம்படியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை ஜெயம் (வயது-32), கந்தசாமி சந்திராதேவி (வயது-50) மற்றும் குருநகரைச்சேர்ந்த நாகன் மார்க்கண்டு(வயது 52) ஆகியோர் காயமடைந்தநிலையில்யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுமாலை அனுமதிக்கப்பட்டுள்ளனர்

கசிப்பு உற்பத்தியின் அதிகரிப்பும், தட்டிக்கேட்பாரற்ற இளைஞர்களின் அடாவாடித்தனமுமே கோஷ்டி மோதல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் காரணமென்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளார். (இ)

# மேலைப் புலோலியூர் பெற்றெடுத்த பெருமகன்

# அருந்தமிழ் அறிஞன் சதாவதானி கதிரவேற்பிள்ளை

ஆறுமுகநாவலரின் மாணவ பரம்பரையில் வந்தவர்களுள் ஒருவர் நல்லூர் தியாகராசபிள்ளை. தியாகராசபிள்ளை அவர்களிடம் முறையாகக் கற்று, ஆறுமுகநாவலரின் மாணவ பரம்பரையுடன் தம்மையும் பெருமையுடன் தொடர்பு படுத்தி, அவர் வழியில் தொண்டு செய்து, பெரும்புகழ் பெற்றவருள் தலைசிறந்தவர் மேலைப்புலோலி பெற்றெடுத்த அருந்தமிழ்ப் பெருமகன் கதிரைவேற்பிள்ளை 1871 களில், புலவர் ஒலி என பெருமையுடன் அழைக்கப்பட்ட மேலைப்புலோலியிலே, நாகப்பிள்ளை, சிவகாமி தம்பதிகளின், சாளரவிடிவெள்ளியாக, கதிரவேற்பிள்ளை, என்னும் குணதிசையோன் வந்துதித்தமைமேலைப்புலோலியின் பெருந்தவப் பேறாகும்.

பிள்ளையவர்கள் பிற்காலத்தில் ஈழவள நாட்டின் முடிசூடாமன்னனாகத்திகழப்போகின்றார்என்பதை, அக்காலத்தில் ஏனையோர் அறிந்திருக்க வாய்ப்பிருந்திருக்கவில்லை. அவரின் தந்தையான நாகப்பிள்ளை அவர்கள், முருகப்பெருமானிடத்தில் பக்திபூண்டு, தனது இல்லத்தில் வேற்கோட்டம் அமைத்து, வழிபட்டு வந்தவர் பிள்ளையவர்கள், மழலை மாறாத பிஞ்சு வயதில், ஆரம்பக்கல்வியைமேலைப்புலோலிசைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பித்து தனது மதிநுட்பத்தால் படிப்படியாக முன்னேறிய இருபதுகளில், உள்ளூரில், ஆசிரியக்கல்வியை ஆரம்பித்தார். அக்கல்வியைநிறைவு செய்து. வேம்பேரிஉயர்நிலைப் பள்ளியிலும், சாந்தோம்உயர் நிலைப்பள்ளிகளிலும் கற்பித்தார். பின்னர் நொத்தாரிசு சிதம்பரப்பிள்ளை அவர்களிடம் எழுத்தாளராய்இருந்தார்

> இன்று கதிரவேற்பிள்ளை அவர்களது நினைவு தினத்தை யொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

பின்பு கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்ற உலக நியதியான பேருண்மையை உணர்ந்து 1895 இல் மேற்படிப்பிற்காக, தமிழ்நாட்டை அடைந்து, தனது கல்வியை திறம்பட நிறைவு செய்தார்.

### தமிழுடன் விளையாட்டு

பிள்ளையவர்கள், தமது பிற்காலங்களை தமிழுடன்விளையாடுவதில் செலவழித்தார். சிறந்த நாவன்மை மிக்க பிள்ளையவர்கள், தமிழ்நாடெங்கும் சைவப்பிரசங்கஞ் செய்தும், நூல்களிற்குநுண்ணுரைகள் பல எழுதிப்பதித்தும், அரியதொரு அகராதியை தொகுத்தும், நூல்கள பலவற்றை புதுப்பித்தும், கண்டனங்கள் பலவற்றை எழுதிப் பரப்பியும், நன்மாணவர் பலரையும்பணி செய்யப்பழக்கிய பான்மையை அன்னாரின் மாணவருள்ஒருவரானதமிழ்ப் பெரியார் திரு.வி. கல்யாண சுந்தரமுதலியார் அவர்கள்,

'... முதன் முதலாக எனக்கு கல்விக்கண் திறந்தவர் யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளை. அவர்தம் பெரும்பொழுது சமயவாதங்களிலும், கண்டனங்கள் வரைவதிலும், செலவாயிற்று ... ஓய்வு கிடைக்கும் எந்த நேரத்திலும், எவ்விடத்திலும், அவர் பாடஞ்சொல்லுவார். அவரது வாதப்பேச்சுகளில், தமிழ் மணங்கமழும். கலைமகள் நடம்புரிவாள். மாணவர் ஐயப்பாடுகள் நீங்கும் ...'

என்று அழகாகவும், அமைவாகவும் எழுதியுள்ளார்.

**இ. அரவிந்தன்**
வதிரி.

### சைவத்திற்கு அர்ப்பணிப்பு

அருந்தமிழ்ப்பெருமகனான பிள்ளையவர்கள் தனது முழு முயற்சியையும் சைவ மக்களிற்காக, அர்ப்பணித்தார். சென்னையிலும் பலவிடங்களில் தொண்டு செய்து வந்தார். சிறப்பாக கந்தசுவாமி கோயில் வசந்த மண்டபத்திலும், சிந்தரிப்பேட்டை பரமேஸ்வரி கோயில் மண்டபத்திலும், தணிகைப்புராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் போன்றவற்றை சொல்லி வந்தார். அவற்றை, 'திரு. வி. க.' முதலியோர், இரண்டிடங்களிலும்கேட்டுப்பயனுறுவர். அவரின் பிரசங்கமேடை, பல்கலைக்கழகங்களாகத் திகழும் எனவும், அவரின், சொன்மாரி வெள்ளத்தில், இலக்கியம், இலக்கணம் தர்க்கம், சாத்திரம் போன்றன தேங்கும் என்றும், அத்தேக்கம் அறிவுப்பசியுடையோர்க்கு கலைவிருந்தாகும் எனவும் திரு. வி. க. அவர்கள் பின்னர் கூறி உள்ளார்.

### நூல்பதிப்பு

கந்தப்ப சுவாமிகள் செய்தருளிய, 'கதிர்காமக்கலம்பகம்' எனும் நூல் கறையானரித்து மறைந்துவிடா வண்ணம் பாதுகாத்து, அதனை பிழையறப் பதித்துதவிய பெருமை, பிள்ளையவர்களையே சாரும். பிள்ளை அவர்கட்குப் புத்தகங்கள் வெளியிடுவதில் உள்ள ஆர்வத்தை கண்ணுற்ற தமிழ் நாட்டுப் பெரியார்கள், அதற்குப் பெரிதும் உதவினார்கள்.

பிள்ளையவர்கள் கருணைப் பெருங் கடலாகிய முருகன்பால் அன்பு கொண்டுஅவனது வல்லமை குறித்து நிற்கும் 'சுப்பிரமணிய பராக்கிரமம்' எனும் சைவாகமக் களஞ்சியத்தை எழுதினார். இந்நூல் பிள்ளையவர்கள் மறைந்த பின்னரே வெளியாகி இருந்தது.

பிள்ளையவர்களும் இறுக்கமான உரையெழுதுவதில் வல்லவராயிருந்தார். அவர் எழுதிய கூர்மபுராணவுரை, பழனித்தல புராணவுரை, திருவருணக்கலம்பகவுரை, சிவராத்திரிப் புராணவுரை, நைடத உரை என்பன அவரது விரிவுரை ஆற்றலைப் பறைசாற்றும்.

அவர் சில வேளைகளில் தம்மவர் பிறர் என்று பாராபட்சம் காட்டாது, கண்டித்து திருத்த முனைந்து, பகைமைக்கும் ஆளாவதுண்டு. எனினும் அவர் தமிழ் நாட்டு நல்லோரால் மதிக்கப்பட்டார். அவரிற்கு தங்கள் அபிமானம் காரணமாக, 'மாயாவாததும்ச கோளரி' 'அத்துவித சித்தாந்த மகோத்தராரணர்' 'நாவலர்', 'பண்டிதர்', 'மகாவித்துவான்', 'பெருஞ்சொற்கொண்டல்' போன்ற பட்டங்களை கற்றறிந்தோர் வழங்கி கௌரவித்தனர்.

மேலைப் புலோலி நாகப்பப்பிள்ளை தம்பதிகள் கண்ட 'சாளரவிடிவெள்ளி' 1907 ஆம் ஆண்டிலே ஒளிமங்காது மறைந்தது. நாவலரைப் போல மகநட்சத்திரத்தில் என அறியக் கிடக்கின்றது■

---

## சான்றிதழை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில் நுட்பப் பூங்காவின்ஓராண்டு நிறைவையொட்டி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றநிகழ்வில் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள தவறியமாணவர்கள அவற்றை அலுவலகத்தில்பெற்றுக்கொள்ள முடியும் என்று இயக்குநர் கே. நந்தகுமார் அறிவித்துள்ளார். (உ-3)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

றெக்கிளமேஷன் கிழக்கு நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்; மோசேஸ் எட்வேட், செயலாளர் துரைசாமி மரிய இரத்தினம், பொருளாளர் தொம்மை அந்தோனிமுத்து, போஷகர் அ. அருள்நேசன்.

அத்துடன், 9பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது. ( எ)

## ஆற்றில் மூழ்கி மூவர் மரணம்

(களுத்துறை)

களுத்துறை களுகங்கை ஆற்றில் நீராடும் போது மூவர் நீரில் மூழ்கி மரணமாகியுள்ளனர்.

மட்டக்களப்புகோரதீவைச் சேர்ந்த இம் மூவரும் களுத்துறையில் ஒரு நகைக் கடையில் வேலை செய்து வருபவர்கள் என்று தெரியவந்துள்ளது. (எ-9)

## வினைத்திறன்காண் தடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நீதிமன்ற எழுதுவினைஞர்களுக்கான வினைதிறன்காண் தடைப் பரீட்சை எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-19)

---

# நாட்டில் நிரந்தர சமாதானம் மலரும் போது நான் உயிருடன் இருப்பது ஐயுறவே

## அமைச்சர் ஜயலத் ஐசுபி திறப்பு விழாவில் உரை

(தென்மராட்சி)

இலங்கையில் சமாதானம் மலர வேண்டும். தமிழர்கள் எல்லோரும் தலைநிமிர்ந்து தன்மானத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக முழு மூச்சுடன் பாடுபட்டு வருகின்றேன்.

இருப்பினும், நான் விரும்பும் நிரந்தர சமாதானம் நாட்டில் மலரும்போது, உயிருடன் இருந்து அதை என் இரு கண்களாலும் பார்ப்பேனோ என்பதில்எனக்கு ஐயுறவு ஏற்பட்டுள்ளது.

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் ஆதரவுடன் உடுவிலில் அமைத்த ஐசுபி விவசாய விளைபொருட்கள் பதனிடும்நிலையத்தை நேற்று திறந்து வைத்து பேசிய புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா இவ்வாறு தன் மனக் கவலையை வெளியிட்டார்.

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தின் தலைவர்சி. குமாரவேல் தலைமையில் நடைபெற்ற அந் நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

சமாதானத்தை ஏற்படுந்தும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைபோட முயலும் சக்திகளால் எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இனவாத அமைப்புக்களும், வேறுசில சக்திகளும் எனது உயிருக்கு நேரடியாகவும்மறைமுகமாகவும் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றன.

இவைகள் எவற்றையும் பொருட்படுத்தாது தமிழர்களின் உரிமையைப் பெற்றுக் கொடுக்க நான் தொடர்ந்தும் பாடுபடுவேன்.

கடந்த 20 வருடங்களாக குடாநாட்டு மக்கள் எந்தவித சலுகைகளையோ, சுகங்களையோ அனுபவிக்கவில்லை.

இவைகளை அவர்களுக்கு பெற்றுக் கொடுத்து நிரந்தர சமாதானத்தோடு நல்வாழ்வு வாழ வழி சமைப்பேன்.

முன்னைய ஆட்சியில், யாழ்ப்பாணம் வந்து சேவையாற்ற நான் எத்தனையோ தடவைகள் முயன்ற போதும் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டதுடன் அப்போதும் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதும்,

பிரான்ஸ் தூதரகத்தில் நான் பாதுகாப்புத் தேடியதும் நீங்கள் அறியாததல்ல எனக் குறிப்பிட்டார்.

அத்துடன், சித்திரைப் புத்தாண்டுடன் ஏ-9 பாதை திறக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இவ் விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு பேசிய பிரான்ஸ் தூதுவர் அம்மையார் மேரி பிரான்ஸ் பக்னியா,

ஏ-9 பாதை திறக்கப்படும் பட்சத்தில் யாழ்ப்பாணத்தில் பதனிட்ட விளைபொருட்களை தென்பகுதியில் சந்தைப் படுத்த வழியேற்படும்.

அப்போது நான் அங்கேயே இப்பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ் விளைபொருட்கள் பதனிடும் தொழிற்சாலை யாழ்ப்பாண விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் என்று குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில், இருநாள் பயணம் மேற்கொண்டுள்ள உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் குணசேகராவும் கலந்து கொண்டார். (உ-77)

---

## மணி விழா நாயகரைக் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

மணிவிழாக்கண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையைக் கௌரவிக்கும் விழா ஒன்று யாழ். கொழும்பு புவியியற்துறைச் சமூகத்தினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி யாழ். இந்துக்கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-19)

---

### பாலா இலங்கை திரும்பியிருப்பது

# குடிவரவு குடியகல்வு சட்டங்களுக்கு முரணானது என்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அன்ரன் பாலசிங்கம் பகிரங்கமாக எவ்வாறு நாடு திரும்ப முடியும்?

ஜே. வி. பி யின் பிரசாரச் செயலரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச நேற்றைய தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் தொடர்ந்தும் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில்;

அன்ரன் பாலசிங்கத்தின் இலங்கை வருகை சட்ட விதிகளுக்கு முரணானது.

இவரை நாட்டிற்குள் அனுமதித்ததன் மூலம் குடிவரவு குடியகல்வுச் சட்டங்கள் மீறப்பட்டுள்ளன.

நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியிலும் முப்படைகளின் தளபதி என்ற வகையில் இவ்வாறான நடவடிக்கைகளை சந்திரிகாவால் தடுத்து நிறுத்த முடியும்.

நாட்டின் சட்ட திட்டங்களைக் கட்டிக் காக்க வேண்டியவர்களே இவ்வாறான செயல்களுக்கு இடம் கொடுத்து வருவது கண்டிக்கப்பட வேண்டியது என்று குறிப்பிட்டார். (உ-8)

## கொடியேற்றம்

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15தினங்கள் நடைபெறவுள்ளது.

(எ-246)

# உலக தரிசனம்

## கொலம்பிய சமாதான முயற்சிகள் முறிவு

(பொஹோரா)
கொலம்பியாவில் அரசாங்கத்திற்கும்தீவிரவாதிகளிற்கும் கிடையில் இடம்பெற்று வந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துள்ளன.

கடந்த 20 ஆம் திகதி கொலம்பிய செனற்றர் ஒருவர் புரட்சிகர விடுதலை இராணுவ இயக்சத்தைச் சேர்ந்தவர்களால் கடத்தப்பட்டதை அடுத்தே இப்பேச்சுவார்த்தைகளில் முறிவு ஏற்பட்டுள்ளது.

இந்தக் கடத்தல் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் 6 இடதுசாரி கெரில்லாக்களை அந்தநாட்டு இராணுவம்கைது செய்துள்ளது.

நேபாளத்தில் இருந்து பொகோட்டா நகர் நோக்கி பயணமான போதே செனற்றர் கடத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-9)

## இந்தோ. ஜனாதிபதி சீனாவுக்கு இராஜீயவிஜயம்

(பீஜிங்)
இந்தோனேஷியஜனாதிபதி திருமதி மேஹவதி சுஹரார்னோபுத்ரி நான்கு நாள அரசமுறைப் பயணமாக பீஜிங் சென்றுளார்.

சீன அதிபருடன் பேச்சுவார்த்தை தொடங்கியிருக்கும் சுஹார்னோபுத்ரி நாட்டின் அரசியல் நிலைகள் பற்றிப் பேசியிருக்கிறார் இருதரப்பு வர்த்தகம் பற்றியும் பேச்சுகள் நடத்துகிறார்.

சீன விஜயத்தை முடித்துக் கொண்டு தென்கிழக்காசிய நாடுகள் சிலவற்றிற்கும் இவர் செல்வாரென எதிர்பார்க்கப் படுகிறது. (து)

### உலக மரதன்

## சம்பியன் சிப் போட்டி எதியோப்பியா வெற்றி

(டப்ளின்)
அயர்லாந்து நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள கனிஷ்டப் பிரிவின் உலக மரதன் சம்பியன் சிப் போட்டியில் எதியோப்பியாவைச் சேர்ந்த 'சுப்றிமரியன்' வெற்றி பெற்றுள்ளார்.

2 வது இடத்தை கென்யாவைச் சேர்ந்த 'அபயல் செரிற்றியும்', 3 வது இடத்தை உகண்டாவைச் சேர்ந்த 'பொனிபஸ் செப்றியும்' பெற்றுள்ளனர்.

இந்தப் போட்டியின் 4 முதல் 10 வது வரையான இடங்களை கென்ய மற்றும் எதியோப்பிய வீரர்களே பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-9)

### காஷ்மீர் எல்லையில்

## இந்திய- பாகிஸ்தான் படையினர் கடும் சமர்

(புதுடில்லி)
காஷ்மீர் எல்லைப் பகுதியில் இந்திய- பாகிஸ்தான் படையினருக்கு இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கடும் சமரில் எட்டு பாகிஸ்தான் படையினர் கொல்லப்பட்டுள்ளனர், பாகிஸ்தான் படையினர் இந்தியப் படையினரின் ஆயுதக் கிடங்கை நோக்கியும கண்காணிப்புக் கோபுரங்களை இலக்கு வைத்தும்தாக்குதலை ஆரம்பித்தனர்.

இதனையடுத்தே இந்தியப் படையினரும் பதில் தாக்குதலைத் தொடுத்தனர்.

இத்தாக்குதலின் போது பாகிஸ்தானியரின் ஆயுதக் கிடங்கு இரண்டு முற்றாக அழிக்கப்பட்டு விட்டது.

(செ)

### 10 ஆயிரத்துக்கும் அதிக மாணவர்கள்

## இஸ்ரேலுக்கு எதிராக ஜெமனில் ஆர்ப்பாட்டம்

(சனா)
பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் நடவடிக்கைகளிற்கு எதிர்ப்புத் தெரிவித்துஜெமன் தலை நகரான சனாவில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள அரபு நாடுகளின் மாநாட்டில் பலஸ்தீனர்களிற்கு ஆதரவான முடிவுகள எடுக்கப்படவேண்டும் என்று கோரியே இவ்வர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது.

அரபு நாடுகளின் உச்சி மாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகள் குறித்து முஸ்லிம் நாடுகள் அனைத்தும் கவனம் செலுத்தி வருவதாக ஜெமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலாய் 'அபுதாபி' தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

(உ-9

## போடோ சட்டம் நிறைவேறும் சாத்தியம்

(புதுடில்லி)
போடோ பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமசோதா கூட்டுச்சபையில் நிச்சயம் வெற்றி பெறுமென்று இந்திய அரசுதரப்புக் கட்சிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

கலப்புக் கூட்டத்தில் இது 70 க்கு மேட்பட்ட வாக்குகளால் வெற்றி பெறுமென்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் தெரிவித்தார்.

கலப்புக் கூட்டத்தில் அ.இ அ.தி.மு.க. தேசிய வாதகாங்கிரஸ் புதிய ஐந்து சுயேச்சைக் குழுக்களின் ஆதரவுடன் நிறைவேறுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

இதேவேளை திருநாமல் காங்கிரஸ் கலப்புக் கூட்டத்தில்கலந்து கொள்ளாது என்று மம்தா பனார்ஜி தெரிவித்துள்ளார்.

நாட்டின் நலன் கருதி போடோபயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நிறை வேறிவிடும் என்று தேசியவாதக்காங்கிரஸ் தலைவர் தெரிவித்துள்ளார்.

(து)

## பாரதிய ஜனதாவுடனான உறவை தி.மு.க. விலக்கிக் கொண்டது

### மத்திய அரசில் மாற்றமில்லை

(சென்னை)
தமிழகத்தில், பாரதிய ஜனதாக் கட்சியுடனான உறவை தி. மு. க. முறித்துக் கொண்டு விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கருத்து தெரிவித்தபோது,

பா. ஜ. கட்சியினரின் வேண்டாததும் உண்மைக்குப் புறம்பானதுமான பேச்சுகளால் அதனுடனான உறவை முறித்துக்கொண்டதாகவும்,

ஆனால் மத்திய அரசில் பாரதிய ஜனதாக்கட்சியுடனான கூட்டில் எந்தவித மாற்றங்களும் இல்லையென்றும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் சென்னையில் கூடிய தி. மு. க.வின் மத்திய செயற்குழு, பா. ஜ. க. தலைமையிலான தேசிய கூட்டணி பொது வேலைத்திட்டத்திலிருந்து மாறுபடக்கூடாதென்று வலியுறுத்தி யுள்ளது.(து)

## அமெரிக்க ஜனாதிபதி பெரு நாட்டிற்கு விஜயம்

(வாஷிங்டன்)
அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்டபிள்யூ புஷ் பெரு நாட்டிற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்துள்ளார்.

கடந்த மூன்றுதினங்களிற்கு முன்னர் பெருநாட்டிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு அருகில் குண்டு வெடிப்பு ஏற்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதியின் வருகைக்கு எச்சரிக்கை விடுக்கும் வண்ணமே இக் குண்டு வெடிப்பு நடத்தப்பட்டது என்று கருதப்பட்டபோதிலும்,திட்டமிட்டபடி அமெரிக்க ஜனாதிபதி பெரு நாட்டிற்கு விஜயம் செய்துள்ளார்.

பெருவின் ஜனாதிபதியைச் சந்தித்த புஷ் அங்கு பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில்; தீவிரவாதத்திற்கு எதிரான போரில் அமெரிக்கா பெருவுடன் இணைந்துசெயற்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் பெரு நாட்டிற்கு விஜயம் செய்வதுஇதுவேமுதற்தடவை என்பது குறிப்பிடத் தக்கது.

(செ)

## 1996- 2001 காலப் பகுதியில் வழங்கப்பட்ட கடவுச் சீட்டுக்கள் யாவும் ரத்து

(காபூல்)
ஆப்கானிஸ்தானில் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2001 ஆம்ஆண்டு வரை வழங்கப்பட்ட வெளிநாட்டு கடவுச் சீட்டுகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டின் புதிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

முன்னர் வழங்கப்பட்ட கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி பயங்கரவாதிகள் வெளிநாட்டிற்குத் தப்பிச் செல்லும் நடவடிக்கைகளை தடுப்பதற்கே புதிய அரசாங்கம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் முன்னர் இருந்த தலிபான் அரசாங்கம், ஆப்கானிஸ்தான் இயக்கத்தினருக்கு பெரும் எண்ணிக்கையான கடவுச் சீட்டுக்களை வழங்கியுள்ளது என்று புதிய அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

(உ-9)

## பலஸ்தீனத்திற்கு ஈராக் ஆயுதங்கள் வழங்குகிறதாம்

### அ. மெ. பத்திரிகை செய்தி

(பக்தாத்)
ஈராக்- பலஸ்தீனத்திற்கு ஆயுத உதவிகளை வழங்கிவருவதாக அமெரிக்காவின் 'நியோக்ரைம்' பத்திரிகை செய்தி வெளியிட்டுளளது.

இஸ்ரேலை எதிர்ப்பதற்கு இந்த உதவிகளை வழங்குவதாக பெயர் குறிப்பிடாதஇஸ்ரேல்அமெரிக்க புலனாய்வுதகவல்களை ஆதாரம் காட்டியே இச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஈரான்-பலஸ்தீனஉதவித்திட்டம் தொடர்பாக யஸீர் அரபாத்தின் உதவியாளர்களும் ஈரானிய அதிகாரிகளும் கடந்த வருடம் மே மாதம் மொஸ்கோவில் இரகசிய பேச்சை நடத்தியுள்ளதாகவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் வருட ஆரம்பத்தில் இஸ்ரேல் கைப்பற்றிய 50 தொன் எடையுள்ள ஆயுதங்கள் அடங்கிய கப்பல் ஈரானுக்கு சொந்தமானது என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அல்கெய்டா இயக்கத்திற்கு ஈரான் அடைக்கலம் வழங்கியுள்ளதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-9)

### பிறேசில் ஜனாதிபதியின் உறவினரின்

## விளை நிலங்களை விட்டு விவசாயிகள் வெளியேற்றம்

(பிறேசிலியா)
பிறேசில் நாட்டு ஜனாதிபதியின் உறவினர்களின் விவசாய நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்திருந்த விவசாயிகள் நேற்று முன்தினம் அந்நிலங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

பிறேசிலில்ஒருசில குடும்பத்தினரே பெரும்பான்மையான நிலங்களை சொந்தமாக்கி வைத்திருந்ததனால் ஆத்திரமுற்ற விவசாயிகள், நிலங்களை மறுபங்கீடு செய்ய வேண்டும்என ஜனாதிபதியை வலியுறுத்தியே அவரது உறவினர்களின் நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருந்தனர்.

பிறேசில் அரசுப் பிரதிநிதி ஒருவர் விவசாயிகளோடு மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பின்னரே அவர்கள் தாம் ஆக்கிரமிப்புச் செய்திருந்த நிலங்களைவிட்டு வெளியேறினர். (செ)

### லண்டனில் இருந்து

## தாய்நாட்டைப் பார்க்கவரும் தமிழர் அகதி அந்தஸ்தை இழக்கும் அபாயம்

(கொழும்பு)
இலங்கையில் அமுலில்இருக்கும் போர் நிறுத்தத்தைபயன்படுத்திக் கொண்டு இலங்கையிலுள்ளதத் தமது உறவினர்களை, பார்ப்பதற்கு லண்டனிலிருந்து இங்கு வரும் தமிழர்கள் தமது அகதி அந்தஸ்த்தினை இழக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த வகையில் அண்மையில் இங்கு வந்துவிட்டு பிரிட்டன் திரும்பியவர்களிடம் குடிவரவு அதிகாரிகள், நீங்கள் இலங்கை சென்று திரும்பி வருகிறீர்களா? நீங்கள் உங்கள் நாட்டிற்கு செல்லவும் தடங்கலேதுமின்றி திரும்பி இங்கு வரவும் முடிகிறதல்லவா? இவ்வாறு கேட்ட அதிகாரிகள் அவர்களின் அகதி அந்தஸ்தை ரத்துச் செய்ததுடன், ஒரு வருடத்திற்கு மட்டும் தங்குவதற்கான விசாவை வழங்குகின்றனராம்.

இவ்விதம் பலருக்கு நடந்திருப்பதாக அங்கு வாழும் தமிழர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பிரிட்டனிலிருந்து இங்கு வரக் கூடிய தமிழர்களின் எண்ணிக்கையும் குறையலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (உ)

## இன்று ஒரு தகவல்

# நல்ல பெயர் வாங்குவது எப்படி?

'நான் நிறைய நல்ல காரியங்கள் செய்து கொண்டிருக்கிறேன். இருந்தாலும்எனக்கு ஒரு பெரிய குறை' என்றார் ஒருவர். 'என்ன குறை' யென்று கேட்டார் இன்னொருவர். 'என்னை யாருமே நல்லவன் என்று சொல்லுகிறதில்லை. அது தான் குறை' என்றார் அவர். நல்ல செயல்களைச் செய்வதென்பது வேறு நல்லவன் என்று பெயர் எடுக்கிறது வேறு. நல்ல பெயர் வாங்குவது என்றால் சும்மாவா? அது சரி எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்குவது எப்படி? இதற்கு ஒரு அனுபவசாலி சில வழிகளைச் சொல்கிறார். அப்படியாவது நல்ல பெயர் வாங்க முடியுதாஎன்று பார்ப்போமா?

அவர் முக்கியமாக இதற்கு எட்டு வழிகளைச் சொல்கிறார். எது எது நம்மால் முடியுமோ அந்த வழியிலேயெல்லாம் போய்ப் பார்க்கலாமே. அவர் சொல்கிற முதல் வழி, மற்றவர்களை உண்மையாகவே பாராட்டுவதற்குப் பழகவேண்டும் என்கிறார். நம்மில் பலர் எப்படியென்றால், அடுத்தவர்கள் ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்தால் அவர்களைப் பாராட்டுவதற்குப் பதிலாக அவர்கள் மேல் பொறாமைப்பட ஆரம்பித்து விடுகிறோம். அல்லது அவர்களிடம் பேசுவதை நிறுத்திக் கொள்கிறோம். அதனால் நமது பெயரும் கெட்டுப் போகிறது. உடம்பும் கெட்டுப் போகிறது.

பிறர் மேல் உண்மையாகவே அக்கறை கொள்ளவேண்டுமென்பது இரண்டாவது வழி. உங்கள் பக்கத்தில் இருப்பவருக்கு இலேசான தலைவலி அதற்கு உங்களிடம் மாத்திரை இருக்கிறது. அப்படியிருந்தால் அதில் ஒன்றை கொடுத்து உதவுங்களேன். அதில் என்ன குறைந்து விடப்போகிறது. ஒரு வேளை அந்தத் தலைவலி நீங்கள் பக்கத்தில் இருப்பதனால் கூட அவருக்கு வந்திருக்கலாம்.

அடுத்தவர்கள் ஒரு தவறு செய்து விட்டார்களென்றால் அதை மறைமுகமாக சுட்டிக் காட்டவேண்டும். 'அய்யயோ, இப்படிச் செய்து விட்டீர்களே' என்று ஆரம்பிக்கக் கூடாது. தவறு என்பது திருத்திக் கொள்ளக் கூடியதுதான் என்பதைஅவருக்கு உணர்த்தி ஊக்கம் அளிக்க வேண்டும். பரவாயில்லை இனிமேல் இப்படி நடக்காமல் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லவேண்டும். உங்கள் எதிரில் இருக்கிறவர்களை அலட்சியப் படுத்தக் கூடாது. அவரும் முக்கியமானவர்தான் என்பதை அவரே உணர்கிற அளவுக்கு நீங்கள் நடந்து கொள்ளவேண்டும். அதற்கு என்ன செய்யலாம். அவருடைய ஆலோசனைகளையும் அடிக்கடி கேளுங்கள்.

'இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்று கேளுங்கள். என்ன . . . நான் சொல்வது சரிதானா? என்று கேளுங்கள். அவரையும் பேசுவதற்கு ஊக்கப்படுத்துங்கள். நீங்கள் மட்டுமே பேசிக் கொண்டிருக்காதீர்கள். அவர் பேசுவதையும் பொறுமையாகக் கேளுங்கள், அப்போதுதான் உங்கள் மேலும் அவருக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் வரும். ஒரு கடுமையான வாக்குவாதம் செய்து கொண்டிருக்கிறீர்கள். அப்படியான வாக்குவாதங்களிலிருந்து சிறந்த பலன் பெறவேண்டும் என்றால் அதிலிருந்து ஒதுங்குவது தான் நல்ல வழியாம். நழுவுவதற்கு நமக்குச் சொல்லியா கொடுக்கவேண்டும்? அது தான் நமக்குக் கைவந்த கலையாச்சே!

இன்னொருவிஷயம் என்னவென்றால் . . . அடுத்தவர்களை மகிழ்ச்சியடைய வைப்பது மூலமாக நாமும் மகிழ்ச்சியடைகிறோம் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். சிலருக்கு மற்றவர்களை அதிர்ச்சியடைய வைத்து வேடிக்கை பார்ப்பதிலேயே ஒரு தனி சுவாரஸ்யம். அவை மிகவும் தவறாகும், அதைவிட இன்னொரு முக்கியமான விடயம் ஒருவருக்கு அவருடைய பெயர்மட்டும் தான் அவரைப் பொறுத்தவரையும் மிக இனிமையான வார்த்தை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமாம். அதனால் அவர்கள் பெயரை எழுதுகிற போதும் சொல்கிற போதும் சரியாக எழுதவேண்டும்- சரியாக சொல்லவேண்டும். அது அவருக்குச் சந்தோஷமாக இருக்கும். நல்ல பெயர் வாங்குவது எப்படி என்பதற்கு ஒரு வெளிநாட்டு நிபுணர் சொல்லியிருக்கும் யோசனைகளே இவைகள்.

இதை இன்றைக்கு உங்களிடம் சொல்வதற்கு முன்னர் இன்னொருவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அந்த அம்மா நாலு நாள் கழித்து கோபமாக என்னிடம் வந்தார். சார்! நீங்கள் சொன்ன யோசனைகளில் ஒன்றை மட்டும் கடைப்பிடித்துப்பார்த்தேன். அதனால் எனக்கு நல்ல பெயர் வரவில்லை கெட்ட பெயர்தான் வந்தது என்றார். 'என்ன செய்தீர்கள்' என்றேன். எங்கள் வீட்டுக்காரரை அவரின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டேன்' என்றார். நமது பழக்க வழக்கத்திற்கு அது சரியாக இருக்காதே 'என்றேன். 'அவர் பெயரைச் சொன்னதில் கூட அவருக்கு வருத்தம் இல்லை. அதைச்செல்ல மாகச் சுருக்கிக் கூப்பிட்டேன். அதுதான் அவருக்கு வருத்தமாம் 'என்றார். அவருடைய முழுப் பெயர் என்ன?' என்று கேட்டேன், 'மாடாசாமி' என்றார் அந்த அம்மா.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# முதல் தர தகவல்களைபெற சர்வோதய குழு வருகை

(தென்மராட்சி)

குடாநாட்டு நிலைமை பற்றிய முதல் தரமான தகவல்களைப் பெறும் பொருட்டு இலங்கை சர்வோதய சிரமதான இயக்கத்தின் தலைமையகத்தில் இருந்து நான்கு பேர் கொண்ட குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

சர்வோதய தலைவர் கலாநிதி ஏ. ரீ. ஆரியரட்ணாவின் துணைவியார் திருமதி நீத்தா ஆரியரட்ணா தலைமையில் வரும் இக் குழுவினர் மாவட்டத்தில் பல்வேறு தரப்பினரையும் சந்திக்கவுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

(உ-77)

## சாவகச்சேரி வைத்தியசாலையை

# மீள இயக்குவதில் உரிய திணைக்கள அதிகாரிகள் அசிரத்தைப் போக்கு

(தென்மராட்சி)

சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்தியசாலையை மீளவும் இயங்கச் செய்வதற்கு உரிய திணைக்கள உயர்மட்ட அதிகாரிகள் ஏற்பாடுகளை மேற்கொள்வதில்பின்னடித்து வருவதாகத் தெரியவருகின்றது.

யுத்தத்தினால் சேதமடைந்திருக்கும் சாவகச்சேரி வைத்தியசாலை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிஅலுவலகம் என்பன இருவார காலத்துக்கு முன் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 'நான்' அமைப்பு தற்போது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினை புனரமைப்புச் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இருப்பினும் கூட இங்கே வைத்தியசாலையை முழுமையாக ஆரம்பிப்பதற்குப் பதிலாக மத்திய மருந்தகத்தின் ஆரம்பிப்பதிலேயே திணைக்கள அதிகாரிகள் கரிசனை காட்டி வருகின்றனர் எனவும் அறியப்படுகின்றது.

இம் முயற்சிக்கு சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்தியசாலைப் பணியாளர்கள் வேண்டிய ஒத்துழைப்புகளை வழங்க முன் வரவில்லை எனவும் அறியப்படுகிறது.

இதேவேளைசாவகச்சேரியில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களின் நன்மை கருதி சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்தியசாலையை மீளவும் விரைவில் இயங்கச் செய்ய வேண்டும் என இப்பகுதி பொது அமைப்புகள் சம்பந்தப்பட்ட திணைக்களத்தைக் கோரத் திட்டமிட்டுள்ளன.

(உ-77)

## சிவகுமார் சிலை மீண்டும் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மத்தியசந்தைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை தியாகி பொன் சிவகுமாரரின் சிலை மீண்டும் நிறுவப்பட்டுள்ளது.

வலிகிழக்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் இப்பணி இடம் பெற்றுள்ளது.

இலங்கை, மற்றும் இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் இச்சிலை உடைக்கப்பட்டமையும் மூன்றாவது தடவையாக இச்சிலை மீண்டும் நிறுவப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ)

## இளங்கலைஞர் மன்றத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசைவிழாவின் நான்காம் நாளான இன்று மாலை 3 30 மணிமுதல் மங்கள இசை, வயலின்இசை, பாட்டு என்பன இடம்பெறவுள்ளன.

(உ-3)

## பொது நூலக திறப்பு விழா

(இணுவில்)

வெளிநாடுகளில்வாழுகின்ற இணுவில் பொதுமக்களின் 20இலட்ச ரூபாமூலம் அமைக்கப்பட்ட இணுவில் பொது நூலக திறப்பு விழா எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

மேற்படி நூலகத்திற்கு 2இலட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் கொள்வனவு செய்யப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-49)

## ஆசிரியர் சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கோப்பாய்க் கிளையின் செயற்குழுக் கூட்டம் நாளை பி.ப 2.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் தலைவர் சோ.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட ஆசிரியர் சங்க பொறுப்பாளர்கள் கலந்து கொள்ள இருப்பதால் சகல செயற்குழு உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார்.

(எ-9)

## மந்துவில் பகுதியில் 300 வீடுகள் தொடர்ந்தும் படையினர் பாவனையில்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள மந்துவில்கிழக்கு, மந்துவில்வடக்கு, மந்துவில் மேற்கு, தாவளை-இயற்றாலை, மீசாலைவடக்கு ஆகிய ஐந்து கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் தம்மை மீளவும் குடியமர அனுமதிக்கும்படி தென்மராட்சி பிரதேச செயலர் மற்றும் யாழ். அரச அதிபருக்கு மகஜர்களை அப்பகுதி பொது அமைப்புகள் அனுப்பிவைத்துள்ளன.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இப்பகுதியில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பெரும்பான்மையான குடும்பங்கள் சடந்த இருவருடங்களாக எவ்வித விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபடாமையினால் வருமானம் எதுவுமின்றி மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் பாதுகாப்புப் படையினர் சுமார்300 க்கு மேற்பட்ட வீடுகளை ப்பயன்படுத்துவருவதாகவும் அறியப்படுகின்றது.

இந்த நிலையில்எமது பகுதியில் வாழ்ந்த குடும்பங்களை மீளவும் அங்கு குடியமர அனுமதியளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-77)

## வட- கிழக்கு கல்விப்பணிப்பாளர்கள்

# புலமைப் பரிசில் பெற்று புதுடில்லி பயணம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து முதல் தடவையாக கல்விப் பணிப்பாளர்கள் புலமைப்பரிசில் பெற்று புதுடில்லி பயணமாகவுள்ளனர்.

வட மாகாணத்திலிருந்து மூவரும் கிழக்கிலிருந்து மூவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே புலமைப்பரிசில்களில் முன்னுரிமை வழங்கப்படாதோருக்கு இம்முறை முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-9)

## முதியோர்க்கு அடையாள அட்டை

(நவற்கிரி)

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து அண்மையில் 13 பேருக்கு முதியோர் அடையாளஅட்டைகள் வழங்கப்பட்டன.

65 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான மேற்படி அடையாள அட்டைக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(எ-233)

## கடலோசை சஞ்சிகை வெளியீடு

(மந்திகை)

யாழ். பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர் மன்றத்தின் 'கடலோசை' சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை மு. ப. 10.00 மணிக்கு விஞ்ஞான உயிரியற்துறை மண்டபத்தில் மாணவர் மன்றத் தலைவர் தி. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆசியுரையையும், வாழ்த்துரையை விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேலும் தாவரவியற்துறை தலைவர் திருமதி நி. ரவிமன்னன் நயப்புரையையும், கடல்வளஅபிவிருத்தி

(2-ம் பக்கம் பார்க்க)

## சிந்தனைக்கு விருந்து

### எதிர்வு கூறுவோர்க்கு எம் வாழ்த்துக்கள்

ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற் றைந்தாம்
ஆண்டின்பின் காடையரின் அட்ட காசம்
வாய்திறந்து சொல்லவுமே முடியா வண்ணம்
வளர்ந்துவரத் தமிழ்மக்கள் வருந்து கின்றார்
நாயிலும்கே வலமான செயல்க ளாலே
நம்மினத்தை இவர்கள்மிக வருத்துகின்றார்
'ஓயுமிக் கொடுமைகளென்' றெதிர்வு கூற
ஓடிவரு வாரெவரோ? அவர்கள் வாழ்க?

'பழையவன்'

எதிர்வு (கூறல்) - இனி நிகழப் போவது

## சமாதானத்திற்கு முரணான கொள்கைகளையுடைய கட்சிகளை மக்கள் நிராகரித்து வருகின்றனர்

### தேர்தல் முடிவு குறித்து முன்னாள் கல்வியமைச்சர் கருத்து

(கொழும்பு)

ஐ. தே. மு. பெற்றிருக்கும் வெற்றி ஒரு உண்மையான வெற்றி. சமாதானத்தை ஏற்படுத்துவதென்று ஐ. தே. மு. கடந்த தேர்தலில் எடுத்திருந்த முடிவை மக்கள் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில கல்வியமைச்சராக கடமையாற்றிய சுசில் பிரேஜயந்த சண்டே லீடருக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவரது பேட்டியின் விபரம் வருமாறு;

1994 தொடக்கம் 2000ஆம் ஆண்டுவரை பொ. ஐ. மு. பத்து தேர்தல்களில் அடுத்தடுத்து வெற்றி பெற்றது. போரை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை நிலை நிறுத்துவதற்காக பொ. ஐ. மு. கொடுத்த வாக்குறுதிகளை மக்கள் நம்பினர்.

ஆனால், கடந்த தேர்தலில் அவ்வாறு முடியாமல் போய் விட்டது. பொதுச் செயலாளர் உட்பட முக்கிய தலைவர்கள் வெளியேறி ஐ. தே. க.வுடன் இணைந்து கொண்டு சமாதானத்தை கொண்டு வருவதாக கூறினர். இதனால் சமாதானத்தை விரும்பிய மக்கள் மாற்றுவழியின்றி சமாதானத்திற்கே வாக்களித்தனர்.

ஜே வி. பியினால் பெரும் வெற்றியை பெறமுடியவில்லை. சமாதானத்தைத் தவிர வேறு கொள்கைகளை முன்வைத்த கட்சிகளை மக்கள் நிராகரித்துள்ளனர்.

பொ. ஐ. மு. தனதுஆரம்ப நிலைப்பாட்டிலிருந்து விலகி விட்டது.

இன்றைய அரசாங்கம் சிறுபான்மையரின் ஆதரவைப் பெறுவதில் வெற்றிகண்டது. இதுவே பொ. ஐ. மு தோல்வியடைந்ததற்கு காரணம் என்று குறிப்பிட்டுள்ளார். (உ)

## தனிஈழக் கொள்கையை புலிகள்வலியுறுத்தவில்லை

### ரவிராஜ் எம்.பி. கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை தொடர்ந்தும் வலியுறுத்தவில்லை என தமிழ் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் என். இரவிராஜ் தெரிவித்துள்ளார்

பொதுஜன ஐக்கியமுன்னணி, மக்கள் விடுதலை முன்னணி என்பவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இவ்வுண்மையினை மறைத்து சமாதான முயற்சிகளினை குழப்பி வருகிறார்கள்.

தமிழ் மக்களிற்கு நீதியின் அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றே போதுமானதாகும் இந்த இலக்கை அடையவே தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினை தமது ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

### அனுமதியின்றி ஏற்றிய மண்ணை

## சேதமடைந்த ஆலயத்தில் ஒப்படைக்க உத்தரவு

(மந்திகை)

கச்சாய்ப் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக மண ஏற்றி வந்த மூவரிடம் சாவகச்சேரி நீதிமன்றம் குற்றப்பணம் அறவிட்டதுடன், ஏற்றிவந்த மணலை யுத்தித்தினால் சேதமடைந்த நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீரகத்திப் பிள்ளையாருக்கு வழங்குமாறு நீதிவான் அ. பிறேம் சங்கர் உத்தரவிட்டார்.

இவ்வாறான குற்றத்தை இனிமேல் புரிந்தால் வாகனம் பறிமுதல்செய்யப்படும் எனவும் நீதிபதி எச்சரித்து விடுதலை செய்தார். (உ-23)

### ஒய்வூதியம் பற்றிய

## அரசின் புதிய திட்டத்தை நாணய நிதியம் வரவேற்பு

(கொழும்பு)

இலவச ஓய்வூதியம் நிறுத்தப்படுவதாகவும், அரச சேவையில் புதிதாக இணைபவர்கள தமது சம்பளத்தில் எட்டு வீதத்தை ஒய்வூதியத் திட்டத்திற்கு அளிக்கவேண்டுமென்றும், அரசாங்கம் தனது பங்காக அத்தகையவரின சம்பளத்தில் 12 சதவீதத்தை அளிக்குமென்றும் புதிய வரவு செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டதை சர்வதேச நாணய நிதியம் வரவேற்றுள்ளது.

பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டம் வாசிக்கப்பட்டபோது நேரில்சென்று அதனைப் பார்வையிட்டவரான சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைப் பிரதிநிதி நதீம் உல்ஹக் தான் இதுபற்றி மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்ததுடன், அரசாங்கத்தின் மீதுள்ள சுமையை குறைக்கும் விதத்தில் மேலும் சீர்திருத்தங்கள் அவசியம் எனவும் தெரிவித்தார். (உ)

### காரைக்கால் அம்மையார்

## குருபூசைப் போட்டி பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கோவில் பற்று இந்து சமய விருத்திச் சங்கம் காரைக்கால் அம்மையார் குருபூசையை ஒட்டி நடத்திய அறநெறிப் பாடல் போட்டியில் பங்கு பற்றியோருக்கான பரிசளிப்பு விழா நாளை பி.ப 1.00 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் சங்கத்தின் தலைவி செல்வி இ.சுப்பையாபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி கலைவாணி இராமநாதனும், சிறப்புவிருந்தினராக சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் வே.யுகபாலசிங்கமும், கௌரவ விருந்தினராக மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் வி. பசுபதிப்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி போட்டியில் பங்கு பற்றி பரிசில் பெறுவோர் விபரம் வருமாறு,

முதலாம்பரிசு: க. உமாஜினி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

இரண்டாம் பரிசு: பா. கர்சிகா விவேகானந்தா வித்தியாலயம்.

மூன்றாம்பரிசு க. ஜஸ்மிலா சோதிவேம்படி வித்தியாலயம். (உ)

## செய்தித் துளிகள்

### இ.செ ச. மீசாலை கிளை சொந்த இடத்தில்

(மந்திகை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின்சாவகச்சேரிப் பிரிவு மீண்டும் மீசாலையில் உள்ள அதன் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள மக்கள், கிணறுகளுக்கு தேவையான குளோறினை மேற்படி சங்கத்தின் கிளையில் பெற்றுக் கொள்ளலாமென அதன் தலைவர் க.மகேஸ்வரன் தெரிவித்தார். (உ-23

### நாய்களுக்கு தடுப்பூசி

(அராலி)

வலி. தென்மேற்குப் பகுதிகளில் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணி இன்று செவ்வாய்க்கிழமை மு. ப. 9.00 -10-30 மணி வரையும் பனிப்புலம் காளையடி மறுமலர் மன்றத்திலும், மு. ப. 11-00 -பி. ப. 12.30 மணி வரை பண்ணாகம் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்திலும், பி.ப. 1.00-2.30 மணி வரை சித்தன்கேணி பொதுச் சுகாதார பரிசோதனைக் காரியாலயத்திலும் நடைபெறவுள்ளது. (செ-214)

### தேர்தல் கொடுப்பனவு

(மந்திகை)

கடந்த பொதுத்தேர்தலில், தேர்தல் கடமையில் ஈடுபட்ட வடமராட்சி கல்வி வலயஊழியர்கள் அதிபர்கள் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் நேற்று முதல் வழங்கப்படுவதாக வலய கல்வி பணிப்பாளர் வி. ரி. செல்வரட்ணம் தெரிவித்தார். (உ-23)

### ஆலோசனைக் கூட்டம்

(மந்திகை)

துன்னாலை வல்லிபுரம் பகுதியில் சட்டவிரோதமாக தனியார் காணியில் மணல் ஏற்றப்படுவது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து ஆலோசிப்பதற்கான கூட்டம் நேற்று புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றது. (உ-23)

### விபத்தில் காயம்

(மந்திகை)

பருத்தித்துறை முனலாம் கட்டை சந்தியில் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவரை மோட்டார் சைக்கிள்மோதியதில் தூக்கி வீசப்பட்டு காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புலோலி தெற்கைச்சேர்ந்த சிறி பிரதீபன் (வயது 22) என்பவரே இவ்வாறு காயமடைந்துள்ளார். (உ-23)

### தொழிலாளி காயம்

(மந்திகை)

பருத்தித்துறை இறங்குதுறையில் பொருட்கள் இறக்கிக் கொண்டிருந்த வேளை சீனி மூட்டை தொகுதி சரிந்து விழுந்ததில் தொழிலாளி ஒருவர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பருத்தித்துறை ஓடக்கரையை சேர்ந்த எஸ். இராஜகுமார் (வயது 18) என்பவரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (உ-23)

### சிறுவர் கல்விக்கு உதவி

(காரைநகர்)

வசதிகுறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை செல்லும் சிறுவர்களுக்கான கல்வித் தேவைகளுக்கு உதவும் பொருட்டு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் இயங்கும் சிறுவர் கண்காணிப்புக் குழுவினர் பிரதேச சிறுவர்நலன் காக்கும் நிதியத்தினை ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்நிதியத்திற்கு உதவும்படி நலன்விரும்பிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-246)

### மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம், இன்று காலை 9.00 மணிக்கு யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையன் தலைமையில் இந்து விடுதியில் இடம்பெறவுள்ளது. (உ-9)

### சாரதி, நடத்துநர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் சாரதி, நடத்துநர், பொறிவலர்கள் (மெக்கானிக்)பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது குறித்த மேலதிக விபரங்களை வலம்புரிக்காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (உ-9)

### அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத்திருமுறை மன்றம் வேலணை மேற்கு பெரியபுலம் ஸ்ரீ மகா கணபதி ஆலயத்தில் மாதாந்தம் பௌர்ணமிதினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிருதிருமுறைப் பாராயணம் என்பன நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (செ)

## சாவகச்சேரி நகரைப் புனரமைக்க இந்திய அரசு உதவ வேண்டும்

### கைத்தொழில் வணிகர் மன்றம் கோரிக்கை

(தென்மராட்சி)

யுத்தத்தினால் அழிக்கப்பட்ட நிலையில் இருக்கும் சாவகச்சேரி நகரத்தைப் புனரமைத்து மீளவும் கட்டியெழுப்ப இந்திய அரசு சீமெந்து, இரும்புக் கம்பி மற்றும் கூரைத்தகடுகளை வழங்க முன்வர வேண்டும்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் கடந்த வாரம் சாவகச்சேரிக்கு விஜயம் செய்திருந்த இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் முதலாவது செயலாளரான சத்தீஸ் ஜோஸிலிடம் கையளித்த மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

2000 ஆம் ஆண்டில் சாவகச்சேரியில் இடம் பெற்ற யுத்தத்தின் காரணமாக சாவகச்சேரி நகரில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த 420 பேர் மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் வர்த்தக நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டுமாயின் நகரம் மீண்டும் விரைவில் கட்டியெழுப்பப்படல் வேண்டும்

அத்துடன் தென்மராட்சி பிரதேசம் முழுமையான விவசாயம் சார்ந்த பிரதேசமாக இருப்பதால் விவசாய நடவடிக்கைகளும் துரிதகதியில் புனரமைக்கப்படல் வேண்டும்.

அந்த வகையில் இந்தியாவில் இருக்கும் நல்லின பசு மற்றும் ஆடுகளை எமது விவசாயிகளுக்கு வழங்க முன்வரல் வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் கோரிக்கைகள் பற்றி உரிய கவனம் செலுத்தப்படும் என முதலாவது செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (உ-77)

## பொன்விழாவை ஒட்டி வினாடி வினாப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் பொன் விழாவையொட்டி வினாடிவினாப் போட்டி கடந்த 22 ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில்இடம் பெற்றது.

இப்போட்டி யாழ். மாநகர சபையின் பிரிவுகளுக்கு இடையில் இடம்பெற்றது. பத்து அங்கத்தவர்களைக் கொண்ட ஆறு குழுக்கள் பங்கேற்றன.

இந்த வினாடிவினாப்போட்டியிலே முதலாவது இடத்தை சோலைவரிப் பகுதியும், இரண்டாம் இடத்தை வாகனப்பகுதி, சுகாதாரப்பகுதி ஆகியனவும் மூன்றாம் இடத்தை வேலைப்பகுதியும் பெற்றுக் கொண்டதாக யாழ். மாநகரசபையின் பொன்விழா ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (உ-19)

கணை கொடிது யாழ்கோடு
செவ்விது ஆங்கன்ன
வினைபடு பாலால் கொளல்.

-குறள்

## வலம்புரி

### புலிகளின் முதற்பணி

தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணம் வருவது உறுதியாகி விட்டது. அவர்களின் வருகையை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்தவண்ணமுள்ளனர். கடந்த ஆறு வருடங்களின் பின்னர் விடுதலைப் புலி உறுப்பினர்கள் நேரடியாகப் பொது மக்களைச் சந்திப்பது மகிழ்ச்சிக்குரியது. அதேநேரம் 95 களுக்கு முன்னர் கட்டிக்காக்கப்பட்ட தமிழர் பண்பாடு- ஒழுக்க விழுமியங்கள் பாறிப் போயுள்ளது. ஒழுக்கக்கட்டமைப்பில் எருக்இலைகள் வளர்ந்து விட்டன. களவு- கசிப்பு- ஆபாசம் எனும் அரக்கர்கள் மக்களை தவறான பாதைக்கு அனுப்பி வைக்கிறது. மாணவர்கள் கூட தமது ஒழுக்கவரம்புகளை மீறும் அளவிற்கு நிலைமை கட்டுமீறிப் போயுள்ளது. இவையெல்லாம் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை விட்டுப் போனதன்பின் ஏற்பட்ட கலாசார சீரழிவுகளில் சிலவாகும்.

களவும், கசிப்பும் கூட்டுத் தொழிலாக நடைபெறுகிறது. அதனைக் கட்டுப்படுத்த வேண்டியவர்களே அதற்குத்துணை போகும் படு பயங்கரம் நடந்து கொண்டிருக்கிறது.

திருடர்களின் அட்டகாசம், அவர்களின் கொலைவெறி இவற்றால் மக்கள் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியாது விழித்திருக்க வேண்டியதாயிற்று. இச் சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணம் வருகிறார்கள் என்ற அறிவிப்பே களவையும், கசிப்பையும் கட்டுப்படுத்துமளவிற்கு வந்துள்ளது.

எனினும்யாழ்ப்பாணம் வருகின்ற விடுதலைப் புலிகள் தமது பணிகளை படிப்படியாகமுன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவைப்பாடொன்று உண்டு. அத்தகைய படிமுறைகளில் களவு-கசிப்பு-ஆபாசம் - இளம் பெண்கள் மீது விடப்படும் சேட்டைகள் இவற்றை கட்டுப்படுத்துவதை முதலாவதாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது மக்களின் விருப்பமாகும். இதற்காக விடுதலைப் புலிகளும் தங்களின் அருமந்த நேரத்தை வீணாக்க வேண்டிய தேவையும் இல்லை. ஆக சம்பந்தப் பட்டவர்களின் பெயர்களுக்கு ''ஓர் கடிதம்'' போதும் அவ்வளவும் அன்றோடு எல்லாம் தன் பாட்டில் நின்றுவிடும்.

# ஈஸ்னோபீலியா, ஆஸ்துமா நோய்களுக்கான மூலிகை மருத்துவ முறைகள் பயன் தருகின்றன

## மருத்துவ விளக்கம்

நமது உடலிலிருந்து வெளியேற்றப்படவேண்டிய கழிவுப் பொருள்களைப் பிரித்து வெளியேற்றுவதில் சிறு நீரகமும் ஒன்று. இது சரிவர இயங்காத நிலையில் வெளியேற்றப்பட வேண்டிய கழிவு நீரில் ஒரு பகுதி இரத்தத்துடன் கலந்து விடுகிறது. இதனால் இரத்தத்தில் உரிய அளவுக்கு மேலான ஈரப்பசை அதிகமாவதுடன் கிருமிகளும் உடன் சேர்ந்துவிடுகின்றன. இதன் காரணமாக இரத்தம் நீர்த்து விடுகிறது. அடர்த்தி குறைவதால் இதைச் சுத்தம் செய்ய இருதயம் விரைவாக இயங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனவே பெருமூச்சு வாங்குதல் இவ்வகை நோயாளிகட்கு ஏற்படும் தொல்லையாகும். மேலும் இருதயத்தில் இரத்தம் சுத்தமடைந்தபின் அதிலுள்ள அதிகப்படி ஈரப்பசை, சளி, நீர் வடிவில் வெளியேறும் தொந்தரவும் இவர்களுக்கு உண்டு. இதுவே ஈஸ்னோபீலியா என்று அழைக்கப்படுகிறது.

தேவையான மூலிகையும் உபயோக முறையும்

வேப்பிலை, துளசி, அத்தி, ஆடாதோடை இலை, முருங்கைக்கீரை. ஆகிய மூலிகைகளைச் சம அளவில் கலந்து மாத்திரை செய் முறைப்படி செய்து கொள்ளவேண்டும், தினமும் காலை, பகல், இரவு மூன்று வேளையும் உணவிற்குப் பின் வேளை ஒன்றிற்கு மூன்று மாத்திரைகளை வாயில் போட்டுத் தண்ணீர் அருந்தி விழுங்க வேண்டும். ஒரு மாத காலத்திற்கு இவ்வாறுசாப்பிட்டுவரவேண்டும். இத்துடன் வயிற்றுக்கும், முதுகில் வயிற்றுக்குப் பின்பகுதியிலும் (சிறு நீரகம் உள்ள புறப்பகுதி) விளக்கெண்ணெய் தடவி அனல் காட்டித்தேய்க்க வேண்டும். இதுபோல் ஒரு மாதம் செய்ய வேண்டும். அவரவர் உடம்புக்குப் பொருத்தமான உணவு வகைகளை, அரை உப்புக் கலந்து, அரைவயிறாக ஒவ்வொரு வேளையும் உட்கொள்ள வேண்டும்.

ஆஸ்த்துமா

நம் நாட்டில் சிறியோர் முதல் பெரியோர் வரை பலரைப் பற்றிக் கொண்டு சிரமத்தைத் தரும் வியாதிகளில் ஆஸ்த்துமா என்னும் தொய்வு வியாதியும் ஒன்று என்பது யாவரும் அறிந்ததே யாகும். நம் உடலிலுள்ள சிறுநீரகங்கள் இரத்தத்திலுள்ள கழிவு நீரைப் பிரித்து வெளியேற்றுகின்றன என்பது நாமனைவரும் அறிந்ததே யாகும். சிலருக்குச் சில நேரங்களில், சிறுநீரகங்களில் வடிகட்டும் பகுதியில் உப்புப் படிவங்கள் படிவதினாலோ, கழிவுப்பொருட்கள் அடைப்பு ஏற்படுவதினாலோ, உணவு வகை, சீதோஷ்ண நிலை மாற்றத்தால் உடலில் ஏற்படும் குளிர்ச்சித் தன்மையால் சுருக்கம் ஏற்படுவதினாலோ, கழிவுநீர் முறைப்படி முழுவதும் இரத்தத்திலிருந்து பிரிக்கப்படமுடியாமல் இரத்தத்திலேயே ஓரளவு கலந்து இருந்து விடுகிறது. அடுத்தாற்போல் இரத்தம் மார்புப் பகுதியில் உள்ள நுரையீரலில் சுரக்கும்நீருடன் கலந்து சுத்தப்படுத்தப்படுகிறது.

நோய்க்காளாதல்

சுத்தப்படுத்தப் பெறும் போது பிரிக்கப்படும் கழிவு நீர் தும்மல் மூலம் மூக்கில் நீராக வெளியேறுகின்றது. இந்நீர் இறுகி மூச்சடைப்பு ஏற்படுகிறது. மூக்குச் சிந்தும் போது இது மூக்குச் சளியாக வெளியேறுகிறது. இறுகிய கழிவுநீரே இருமலின் போது கோழையாக வெளியாகிறது. இம்முறைகளில்வெளியேற்றப்படாத எஞ்சிய கழிவுநீரே நுரையீரல் பகுதியில் படிந்துவிடும் கபம் எனப்படுவதாகும். இதன் காரணமாகவே, தொடர்ந்து சலதோஷம், மூச்சுத் திணறல், மூக்கடைப்பு, மூக்கில் நீர் வடிதல், தும்மல், இருமல், கபம், பீனிசம், மூச்சு வாங்குதல் போன்றவை ஏற்படுகின்றன. இத்தகையோர் அனைவரும் ஆஸ்த்துமாவிற்கோ ஈஸ்னோபீலியாவிற்கோ தொடர்புள்ளவர்களாக ஆகின்றனர் எனக் கொள்ளலாம்.

ஆஸ்த்துமா, ஈஸ்னோபீலியாவைக் குணப்படுத்தும் முறை என்ன? சிறுநீரகங்கள் சீராகச் செயற்படச் செய்திட பக்கவிளைவு ஏற்படுத்தாத தக்கமூலிகை மருந்தை உட்கொள்ள வேண்டும். சிறுநீரகங்களில் உள்ள வடிகட்டும் நுண்வலை நரம்புகளை விரைவில் சரிசெய்ய விசேஷ அனல் சிகிச்சை முறையைச் செய்து கொள்ள வேண்டும்.

தேவையான மூலிகைகள்

சீரகம் 15 கிராம், தனியா 15கிராம், பசுமையானமுற்றிய வேப்பிலை 15 கிராம், வில்வம் இலை 25 கிராம், அத்தி இலை 25 கிராம், ஆடாதோடை இலை25 கிராம், தண்ணீர் $1\frac{1}{2}$ லீட்டர் ஆகியவற்றை கஷாயம் தயாரிப்பு முறைப்படி செய்து தினமும் நூறுமில்லி கஷாயம் காலையில் வெறும் வயிற்றில் அருந்திவர வேண்டும். ஒருமுறைதயாரித்த கஷாயத்தை தினமும் சிறிது சூடேற்றி அதிலிருந்து எடுத்து நான்கு தினங்கள் குடித்து வரலாம், 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் நூறு மில்லியும் 25 வயதுக் குட்பட்டவர் 50 முதல் 75 மில்லி கஷாயமும் வரை அருந்தி வரலாம். இம் மாதிரி தொடர்ந்து 20 தினங்கள் கஷாயத்தை நாவினால் ருசித்துச் சிறிது சிறிதாக அருந்திவரவேண்டும். நீண்ட கால நோயாளிகள் 3 மாத காலம் சாப்பிடவேண்டும்.

உணவுக்கட்டுப்பாடு

காலையில் உடம்புக்கு ஒத்துக்கொள்ளும் விதமான சிற்றுண்டியையும் திருப்தியாக உண்ணவேண்டிய அளவில் பாதிமட்டும் சாப்பிட்டு வர வேண்டும். நடுப்பகல் உணவாக முழுத்திருப்தியாகச் சாப்பிடவேண்டிய சாப்பாட்டில் முக்கால் பாகம் உணவு, நீர் ஆகாரமாகவும் நன்கு வெந்த காய்கறிகளாகவும் இருப்பது நல்லது. இருப்பு ஆகாரம் திருப்தியாக உண்ணவேண்டிய அளவு உணவிலிருந்து அரைப்பங்கு உண்ணலாம். எளிதில் ஜீரணிக்கக் கூடிய எவ்வித உணவாகவும் இருக்கலாம். பயன்படுத்திக் குணமடைந்த பின்னர் மற்றவர்களுக்கும் கூறுவதே பயனுள்ளதாகும்.

நன்றி:
**மருத்துவக் குறிப்புகள்**
**அறத் தமிழ் ஞானம்**

## வண்ணாத்தி பாலத்தால் பஸ்சேவை நடத்தகோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பங்குனித் திங்கள் உற்சவத்திற்கு மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயம் செல்வதற்கென விசேட பேருந்து வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

இந்தவகையில், காலை7.30 மணிக்கு சுன்னாகத்தில் இருந்து புறப்படும் பேருந்து புத்தூர் வண்ணாத்தி பாலத்தால் மட்டுவில் ஆலயம் சென்றடையும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 7. 30 மணிக்குப் புறப்படும் பேருந்து கண்டி வீதியூடாக நுணாவில் கனகம்புளியடியூடாக ஆலயத்தைச் சென்றடையும்.

கொடிகாமத்தில் இருந்து காலை 9. 00 மணிக்கு புறப்படும் பேருந்து நுணாவில் கனகம்புளியடியூடாக ஆலயத்தைச் சென்றடையும்.

சங்கானையில் இருந்து மு. ப. 10 மணிக்குபுறப்படும் பேருந்து மருதனார்மடம், கோப்பாய், கைதடி, நுணாவில், கனகம்புளியடி ஊடாக ஆலயத்தைச் சென்றடையும்,

இதேவேளை, நாள்தோறும் காலை, மாலை வேளைகளில் சுன்னாகத்தில் இருந்து புத்தூர்வண்ணாத்திப் பாலத்தால் பேருந்துச் சேவை நடத்துமாறு மட்டுவில் இந்து இளைஞர்மன்றம் கோண்டாவில் சாலை முகாமையாளரைக் கோரியுள்ளது.

(உ)

## தினசரி தியானம்

### தேடுமிடம்

எத்தான் மறவாதே நினைக்கின்றேன்
மனத்துன்னை.

- சுந்தரர்

உலகெலாம் தேடியும் தெரிதற்கரிய தெள்ளமுதே உள்ளத்தின் கண் உன்னை நான் உள்கக் கற்றுக்கொள்வேனாக.

பலம் வேண்டுபவர் உடலிலிருந்து அதைப் பெற வேண்டும். பயிற்சியும்உழைப்பும் அதற்குற்றஉபாயம். பயில்வான்கள் ஆனவர் எல்லோரும் அதைத்தான் செய்தனர். அறிவு வேண்டுபவர் அறிவையே தீட்டிக் கொண்டிருக்க வேண்டும். தீட்டுமளவு அறிவு தெளிவு பெறும். பேரமைதி வேண்டுபவர் அதை உள்ளத்தினுள்ளே தேடிப்பார்ப்பார்களாக. ஒவ்வொன்றும் இருக்குமிடம் தெரிந்து தேடுவது தக்காரது செயல்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (42)

**புனித வாரம் (ஊதா)**

**திபா 105:4-9 71:1-6,15,17. 'நான் உமது மீட்பைப் புகழ்ந்து பாடுவேன்'**

நண்பர்களைத் தேர்ந்து கொள்வதில் இயேசு ஏமாந்து விட்டாரே என்று சொல்லத் தோன்றுகிறது! தாம் தேர்ந்து கொண்ட நண்பர்களை முழுமையாக நம்புகிறார். இயேசு தன்னைக் காட்டிக் கொடுக்கவாய்ப்புத் தேடுபவரிடம் பணப்பொறுப்பை ஒப்படைக்கின்றார். அச்சத்தினால் தம்மை மறுதலிப்பவரைத் தன் திருச்சபையின் தலைமைப் பொறுப்பில் அமர்த்துகிறார். மீதியுள்ள நண்பர்களிலும் யோவானைத்தவிர அத்தனை பேரும் ஓடிவிடத்தானே செய்தார்கள். இத்தகைய நண்பர்களைத் தான் இயேசு இறுதிவரை அன்பு கூர்ந்தார். தன் பிரியாவிடை பாஸ்கா உணவை இவர்களிடம் தான் பகிர்ந்து கொண்டார்.

தன்னைக் காட்டிக் கொடுப்பவனுக்கு அப்பத்தைத் தோய்த்துக் கொடுத்து அன்புறவு கொண்டாடுகின்றார். இவர்களைத் தான் தம் திருத்தூதர்களாக்கினார். தம் நட்பிலே இறுதிவரை வழுவாதிருக்கிறார். நாம் கொண்டிருக்கும் உறவிலே எத்தனை உறவுகள் சிறிய குறைகளுக்காகத் தூக்கி எறியப்பட்டுள்ளன? நம் நட்பிலும் உறவிலும் உள்ள நம்பிக்கைக் குறைவை உடனே சரிசெய்வோம்.

காவலன்

**மில்க்வைற் மினி சோப்**

உற்பத்திகளை அன்னை தோப்பிக்கடை, நவீனசந்தை யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை ரூபா 6/-

மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்

527, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 3541

## அன்ரன் பாலசிங்கம்...

நின்றிருந்தனர்.

திரண்டுநின்றிருந்த தளபதிகளுடனும் பொறுப்பாளர்களுடனும் பாலசிங்கம் இன்முகத்துடன் அளவளாவினார். இதனைத் தொடர்ந்து பாலசிங்கம் தம்பதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் அவர்களது செயலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இப்பயணத்தின் போது பல் வேறு விடயங்கள் தொடர்பாக பாலசிங்கம் தம்பதிகளுடன் பிரபாகரன் தம்பதிகள் பேசியதாக தெரியவருகிறது.

***இன்று முத்தரப்பினரும் முக்கிய பேச்சுக்களில் ஈடுபடுவர்***

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், நோர்வேயின் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான சிறப்புத் தூதுக் குழு ஆகிய முத்தரப்பினரும் இன்று முக்கிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முத்தரப்புப் பேச்சுக்களின் போது சமாதானப் பேச்சுக்கான நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பல முக்கிய விடயங்களும் ஆராயப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## அரசியல் யாப்பு சபைக்கு எச்.எல்.டி சில்வா நியமனம்

அரசியல் யாப்புச் சபைக்கு ஜனாதிபதியின் பிரதிநிதியாக, ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல். டி. சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். 173வது அரசியல் யாப்புச்சீர் திருத்தத்திற்கு அமைவாக இந் நியமணம் வழங்கப்பட்டிருக்கிறது.

இது தவிர ஜனாதிபதியின் அரசியல் யாப்பு சபை உறுப்பினர்களாக ஏ.ஆர். வி. அமரசிங்க, லஷ்மன் வீரசேகர, எஞ்சமில், ரி. சுந்தரலிங்கம், ஆர்.சீ. கருணாகரன் மற்றும் எஸ்.எஸ். விஜயரட்ணா ஆகியோரும் நியமிக்கப் பட்டுள்ளனர். (இ-8)




## திறப்பு விழா அழைப்பிதழ்

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான விஷு வருடம் பங்குனி மாதம் 13ம் நாள் 27.03.2002 புதன் கிழமை பகல் 11.10 மணிமுதல் 12மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில் முத்துமாரி நகைமாடம் எனும் ஸ்தாபனத்தை நகை வியாபாரம் ஆரம்பிக்க திருவருள் கூடியுள்ளது அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் வருகைதந்து விழாவினை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:-
உரிமையாளர் முத்துமாரி நகைமாடம்
இல 78, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிறி கருமாரி நகையகம்
இல 177D, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C.3753)

உ
சிவமயம்



## திறப்பு விழா அழைப்பிதழ்

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான விஷு வருடம் பங்குனி மாதம் 13ம் நாள் (27.03.2002) புதன் கிழமை முற்பகல் 9.15 மணி முதல் 10.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

நித்திய கல்யாணி நகை மாளிகை

**Nithiyakalyanee Nakai Malikai**

'என்னும் புதிய நகை வியாபார ஸ்தாபனத்தை இறைவன் துணை கொண்டு திறப்பு விழா செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள், அனைவரையும் வருகை தந்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
உரிமையாளர்
நித்திய கல்யாணி நகை மாளிகை

(C.3752)

## பதவி வெற்றிடம்

**பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை**

- அலுவலகச் செய்தியாளர்கள் (ஆண்கள் வெளியகம்)
- அலுவலகச் செய்தியாளர்கள் (பெண்கள் உள்ளகம்)
- புகைப்படப் பிடிப்பாளர். சொந்தமாக கமரா வைத்திருப்பதுடன், செய்தி சேகரிக்கக் கூடிய ஆற்றலும் இருத்தல் வேண்டும்

**தகைமைகள்:-**

(01)க.பொ.த சாதாரணதரத்தில் தமிழ், கணிதத்தில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி.

(02)க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி வயதெல்லை 20வயதுக்கும்40வயதுக்கும்இடைப்பட்டவர்கள்

(03)சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களுடன் 29.03.2002 வெள்ளிக் கிழமை காலை 10மணிக்கு நேரில் வரவும்

இல 15 வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்

நிர்வாகம்
வலம்புரி

## மரண அறிவித்தல்

### திருமதி பூமணி பொன்னுத்துரை

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி பொன்னுத்துரை 25.03.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா செல்லம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் சறோஜினி தேவி, இராஜமனோகரன், காலஞ் சென்ற புலேந்திரன், சுந்தரீஸ்வரி (யாழ் போதனா வைத்தியசாலை) சந்திரசேகரன், பொன்மணி, கிருஸ்ணராஜா ஆகியோரின் தாயாரும் காலஞ் சென்ற ஞானச்சந்திரன், கருணைநாயகி, ஆனந்தராஜா, கதிர்காமநாதன், ஸ்ரீமணி ஆகியோரின் மாமியாரும் காலஞ் சென்ற செல்வராசா, தர்மலிங்கம், காலஞ்சென்ற ஜெயமணி, தவமணி, காலஞ்சென்ற ராஜதுரையின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.03.2002 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3. மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29.சந்தனமாதா
கோவில் ஒழுங்கை,
சுண்டுக்குளி
யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி சுந்தரீஸ்வரி
ஆனந்தராஜா (மகள்)



## காரை நகர் மணற்காடு அருள்மிகு தேவி கும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆலயம் விஷு வருட மகோற்சவ விஞ்ஞாபனம்



**அம்பிகை அடியார்களே!**


ஆதி சேஷ்த்திரமாகிய காரைநகர் மணற்காடு அன்னை முத்துமாரி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் விஷு பங்குனி மீ 15 உ (29.03.2002) வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் விழா சிறப்பாக நடைபெறும் அடியார்கள் ஆசாரசீலர் களாக காலையிலும், மாலையிலும் வருகைதந்து அம்பாளின் அருளைப் பெற்றுய்யவும்

### கிரியா நிகழ்ச்சிகள்


| | |
|---|---|
| *துவஜாரோகணம் (கொடியேற்றம்)* | (29.03.2002) பங்குனி மீ. 15 உ வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு அபிஷேகம், காலை 9.00 மணிக்கு வசந்த மண்டப பூசை காலை 10.00 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும். |
| *மிருக யாத்திரை (வேட்டை)* | (09.04.2002) பங்குனி மீ. 26 உ செவ்வாய்க்கிழமை மாலை காலை 7.00 மணிக்கு அபிஷேகம், பகல் 2.00 மணிக்கு வேட்டைக்கு புறப்படுதல் மாலை 9.00 மணிக்கு பிராயச்சித்தம் தொடர்ந்து மாலைத் திருவிழா |
| *சப்பறம்* | (10.04.2002) பங்குனி மீ 27 புதன்கிழமை |
| *ரதோற்சவம் (தேர்)* | (11.04.2002) பங்குனி மீ 28 உ வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு ஸ்தம்ப பூஜை காலை 9.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை பகல் 11.00 மணிக்கு ரதாரோகணம் பகல் 1.30 மணிக்கு பச்சை சாத்துதல் பி.ப. 2.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் |
| *தீர்த்த வாரி* | (12.04.2002) பங்குனி 29 உ வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு வசந்த மண்டப பூசை பகல் 11.00 மணிக்கு தீர்த்தவாரி பி.ப 4.30 மணிக்கு வசந்த மண்டப பூசையும் ஊஞ்சலும் மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கம் |

வருடாந்த பொங்கல் (19.04.2002) சித்திரை மீ 6 உ வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணி விசேட விழாக்கள் தவிர்ந்த ஏனைய தினங்களில் வசந்த மண்டப பூசை பகல் 11.00 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் நடைபெறும்

பிரதமகுரு சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்கள் மகோற்சவகுரு சிவஸ்ரீ சிவமூர்த்திக் குருக்கள் (கட்டுடை) மங்கள வாத்தியம் காரை கணேசன் புதல்வர்கள் திருவிழாக் காலங்களில் ஒவ்வொரு நாளும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.



"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"



**வே. நடராசா**
ஆலய பெறுநர்

முத்துமாரி அம்பாள் ஆலயம்
காரைநகர்

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.